LIBRARY
30 JUN 1966
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 2nd March 1966.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Oil, off Coromandal Coast.

* 147 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether any investigation has been made to explore the possibilities of striking oil, off the Coromandal Coast ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. Seismic surveys off the Coromandal Coast were started by the Soviet Seismic Survey ship in the early part of September 1964 and the operations continued till the end of October 1964 by which time the weather conditions in the region became unfavourable for carrying out seismic survey operations on the east coast. The ship resumed the seismic surveys in the off-shore region in June 1965 and the work is expected to be completed by the end of August 1966. After the completion of the seismic survey, the data will have to be computed and interpreted and if any large indications of presence of oil are obtained, deep, off-shore drilling will be taken up by the Oil and Natural Gas Commission.

திரு. வை. சங்கரன் : இது தவிர காவேரி படுகையிலே எண்ணெய் வளத்தைப் பற்றி ஆராய்ந்து பரிசோதனை செய்வதற்காக தனி அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் அந்த ஆராய்ச்சியின் பலன்கள், விளைவுகள் என்னென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆயில் அண்டு காஸ் கமிஷன் முலமாக நம்முடைய நாட்டிலே பட்டுக்கோட்டை திருத்துறைப்பூண்டி பகுதிகளிலே எண்ணெய் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டிருக்கின்றன. அதேபோல் காரைக்கால் பகுதியிலே அவர்கள் சற்றேறக் குறைய 6,000 அடி ஆழத்திற்கு பூமிக்கு அடியில் குழாய்கள் இறக்கி அதிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : இதுவரை வெளிவந்த செய்திகளிலிருந்து 2,000 மீட்டர் ஆழம் வரை குழாய்கள் செலுத்தியிருக்கவேண்டும். சில இடங்களில் காஸ்மட்டும்தான் கிடைப்பதாகவும் இன்னும் தோண்டினால் எண்ணெய் கிடைக்கலாம் என்ற அபிப்பிராயங்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இதுவரை தோண்டிப்பார்த்ததிலே எண்ணெய் கிடைத்திருக்கிறதா ? அல்லது, வெகு விரைவிலே எண்ணெய் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : காரைக்கால் பகுதியில் ஓரளவு எண்ணெய்ச் சத்து கிடைத்திருக்கிறது. ஆனால், அது போதுமான அளவிற்கு இருக்கிறதா, அதைப் பயன்படுத்தக்கூடிய அளவு வால்யூம், க்வாண்டிடி இருக்கிறதா என்று தெரியவில்லை. இது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : இந்தப் பரிசோதனையில் ரஷ்ய நாட்டு நிபுணர்கள் தான் கருத்து தெரிவிக்கிறார்களா அல்லது பிற நாட்டு நிபுணர்களும் கலந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடல் ஆராய்ச்சி, ரஷ்ய நாட்டு நிபுணர்களால்தான் செய்யப்பட்டுவருகிறது. தஞ்சாவூர் காவேரிப் பகுதியில் நடந்துக்கொண்டிருக்கிற ஆராய்ச்சி நம்முடைய நிபுணர் களால் செய்யப்படுகிறது.

திரு. வை. சங்கரன் : ஆயில் அண்டு காஸ் கமிஷனுக்கு உதவியாக நம்முடைய ராஜ்யத்திலிருந்து தனியாக அமைப்பு அமைக்கப்பட்டிருக் கிறதா ? வேலை சீக்கிரமாக நடைபெறுவதற்கு நம்முடைய ராஜ்யத்தி லிருந்து அமைப்பு அமைப்பதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மத்திய சர்க்காரின் பொறுப் பில் இருக்கிறது. ஆகையால் இதற்குத் தனியாக அமைப்பு இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : காரைக்கால் பகுதியில் போரிங் போட்ட இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு ஷிப்ட் பண்ணுவதாகச் செய்தித் தாள்களிலே பார்த்தோம். அதற்கு முன்பு போட்ட இடத்தில் கிடைக்க வில்லையா அல்லது வேறு எதற்காக மாற்றப்பட்டது என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எண்ணெய் ஆராய்ச்சியில் குழாய் களை ஆழமாகச் செலுத்தி பல இடங்களில் பரவலாகப் போட்டுப் பார்க்க வேண்டும். இதனால்தான் வேறு இடத்தில் போட்டு பார்த்திருப்பார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : தஞ்சாவூர் மாவட்டத்தில், காரைக்கால் பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்று தெரிகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல்லைத் தவிர வேறு தொழிலே கிடையாது. ஆகவே, அங்கே இந்தத் தொழில் வந்தால் உபயோகமாக இருக்கும் என்ற காரணத்தினாலே விரைவிலே ஆராய்ச்சி நடத்த அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆராய்ச்சிகளை ஆராய்ச்சி முறையில் தான் செய்ய வேண்டும். விரைவிலே செய்யவேண்டுமென்று கருதி ஆராய்ச்சிகளை முடித்துவிட்முடியுமா ? இப்பொழுது காலதாமதம் இல்லாமல் வேலை நடந்துகொண்டிருக்கிறது. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : எண்ணெய் வளம் இருப்பதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதற்கு நம்முடைய நாட்டு நிபுணர்கள் வெளி நாட்டிற்கு அனுப்பப்பட்டு வந்திருக்கிறார்களா ? அல்லது, நம்முடைய நாட்டிலே பயிற்சி பெற்று வந்திருக்கிறார்களா. என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் சொன்னேன் கடல் பகுதியிலே இருக்கும் எண்ணெய் ஆராய்ச்சிகள் ரஷ்ய நிபுணர்களால் நடத்தப்படுகிறதென்று. காரைக்கால் பட்டுக் கோட்டை போன்ற பிற பகுதிகளிலே நம்முடைய நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. நம்முடைய நாட்டிலே அதற்குப் போதுமான நிபுணர்கள் இருக்கிறார்கள்.